ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

2459/29 - 2025 ඔක්තෝබර් මස 22 වැනි බදාදා - 2025.10.22

*2459/29 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 22 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ சட்டத்தின் 16(2ஈ) பிரிவின் கீழ் செய்யப்படும் விளம்பரம்**

**உத்தேச என்விஷன் டச் பே 150 மெகாவாட் + 28 பெஸ் புதுப்பிக்கத்தக்க காற்று மின்சக்தி செயற்றிட்டம் கற்பிட்டி, புத்தளம் மாவட்டம்**

**சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை**

1988 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க மற்றும் 2011 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்கச் சட்டங்களின் மூலம் திருத்தப்பட்ட 1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக கொழும்பு 03, பென்ட்ரிவ் கார்டன்ஸ், 2/கு இலக்கம் 04 விசாலமுடைய என்விஷன் எனர்ஜி இன்டர்நெஷனல் ட்ரேடிங் தனியார் நிறுவனத்தினால் முன்வைக்கப்பட்ட கற்பிட்டி பிரதேசத்தில் நிர்மாணிப்பதற்கு உத்தேசித்துள்ள **150 மெகாவாட் + 28 பெஸ் புதுப்பிக்கத்தக்க காற்று மின்சக்தி செயற்றிட்டத்திற்கான சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை** பொதுமக்கள் பார்வைக்காக கீழ் குறிப்பிடப்படும் இடங்களில் நாளாந்தம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரை 2025.10.22 ஆம் திகதி முதல் 30 நாட்களுக்கு வைக்கப்பட்டிருக்கும். (வார இறுதி மற்றும் அரச விடுமுறை தினங்கள் தவிர),

அதற்கு மேலதிகமாக, கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.coastal.gov.lk ஊடாக அவ்வறிக்கை மூன்று மொழிகளிலும் பார்வைக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

1. கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களம், 4 ஆம் மாடி, புதிய செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10.

2. மத்திய சுற்றாடல் அதிகார சபை, இல. 104, "பரிசர பியச", டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல.

3. மாவட்ட செயலகம், புத்தளம்.

1A - G 45606— 23 (2025/10)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

4. பிரதேச செயலகம், கற்பிட்டி.

5. பிரதேச சபை, கற்பிட்டி.

6. மத்திய சுற்றாடல் அதிகார சபை, மாவட்ட அலுவலகம், புத்தளம்.

7. வடமேல் மாகாண சுற்றாடல் அதிகார சபை, மாளிகாவ, குருநாகல்.

8. கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம், மாவட்ட அலுவலகம், புத்தளம்.

9. கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களம், பிரதேச அலுவலகம், காக்கபள்ளிய, சிலாபம்.

இந்த உத்தேச திட்டத்தினால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் தாக்கங்கள் பற்றிய சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தொடர்பான பொதுமக்கள் அபிப்பிராயங்களை 2025.10.22 ஆந் திகதி முதல் 30 நாட்களினுள் கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு எழுத்தில் சமர்ப்பிக்குமாறு தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பேராசிரியர் பீ. பி. டர்னி பிரதீப் குமார,**
பணிப்பாளர் நாயகம்,
கரையோரம் பேணல் மற்றும் கரையோர
மூலவள முகாமைத்துவம்.

கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களம்,
புதிய செயலகம், 4 ஆம் மாடி, மாளிகாவத்தை, கொழும்பு 10.

தொலைபேசி இலக்கம் : 011-2449754, 011-2387922, 011-2449197
பெக்ஸ் இலக்கம் : 011-2438005, 011-2472623
ஈ-மெயில் : dg.ccd.lk@gmail.com

EOG 10-0168

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.